மண்முனைமேற்கு பிரதேச சபை-2013

---------------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

---------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 மார்ச்27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்.

------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை மேற்கு பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

---------------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்.

-------------------------------------------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

---------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக ரூபா.185,062 பெறுமதியான தளபாடங்கள் கழிக்கப்பட்டிருந்த போதிலும், அவை பதிவழிக்கப்படாமல் உள்ளதனால் நிதிக்கூற்றில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் மீதியானது பேரேட்டின் படி ரூபா.6,954,180 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா.6,254,697 ஆகக் கொண்டு வரப்பட்டதனால் அத்திகதியில் உள்ளவாறான வைப்பு மீதியானது ரூபா.699,483 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற இரண்டு சில்லு உழவு இயந்திரம் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 செலுத்தவேண்டிய கணக்கு

-----------------------------------------------

1990-2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு தேவைகளுக்காக பெறப்பட்ட முற்பணங்கள் ரூபா.1,873,377 தொகையை செலுத்துவதற்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களிலுள்ள பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள். |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| காணிகள் | 17,254,585 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 1,299,297 | விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 768,188 | |
| மோட்டார் வாகனம் | 145,425 | |
| நூல்நிலைய புத்தகங்கள் | 930,723 | |
| கடன் வழங்குனர் | 1,873,377 | விபரமான கடன்கொடுத்தோர் பட்டியல் |

1.3.5 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i)அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்புபிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii)அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.. |
| (iii)அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டின் மூன்று சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக்கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதிமீளாய்வு.

------------------

2.1 நிதிவிளைவுகள்.

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடியவருமானம் ரூபா.4,652,788 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,468,002 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.184,786 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

----------------------------------

2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

------------------------------------------------------------

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகை | 1,821,000 | 1,364,245 | (456,755) |
| சேவைகளுக்கான கட்டணம் | 852,500 | 496,376 | (356,124) |
| தண்டப்பணம் | 906,000 | 2,610,105 | 1,704,106 |
| ஏனைய வருமானங்கள் | 1,265,000 | 1,959,265 | 694,265 |
| அரசிறைவருமானம் | 9,690,000 | 8,295,153 | (1,394,847) |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததினால் சபை அண்ணளவாக ரூபா.500,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.

3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் மற்றும் உள்ள படியான செலவினத்திற்கும் இடையில் 53% தொடக்கம் 75% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக்கட்டுப்பாடு

(இ) வருமானச்சேகரிப்பு

(ஈ) வருமானமுகாமைத்துவம்

(உ) நிலையானசொத்துக்கட்டுப்பாடு

(ஊ) பதவியினர் கடன் அறவீடு